[28th January 1972

பொருள்களுக்கு எதிர் காலத்தில் சந்தை இருக்குமா என்ற ஐயம் தெரிவிக்கப் பட்டு நம்முடைய நிபுணர்கள் ஆராய்ந்ததில் மார்க்கெட் இருக்குமென்று சொல்கிறார்கள். இதற்குப் போட்டியாக கோளாவிலே ஒரு நிறுவனம் இருக்கிறது. அவர்களே மார்க்கெட் இல்லை என்று வாதிடுகிறார்கள். அவர்கள் வாதிடுவதால் நாமும் சந்தேகப்பட வேண்டியிருக்கிறது. தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் இது தேவைதான். மொத்தமாக இந்திய அளவில் இது தேவையா என்பதைப்பற்றி மத்திய அரசு இதற்கு அனுமதி கொடுப்பதற்கு முன்பு டி. ஜி. டி. கருத்தைத் தெரிவித்து, அந்நிய நாட்டுச் சந்தையைக் கணக்குப் பார்த்து, அனுமதி கொடுக்கிறார்கள். ஆகையால் இதற்குச் சந்தை இருக்குமென்ற நம்பிக்கையில் தான் தொடங்கப்படுகிறது.

THIRU G. SWAMINATHAN: May I know, Sir, whether the Hon. Minister had a talk about this project in the United States of America when he had been there?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அமெரிக்காவிலே இந்தத் தொழில் புதுவிதமான முறையில், சிங்க்-ஆக்ஸைடு என்ற துணை பொருள் வெறும் ஆய்வு முறையில் அங்கே இருக்கிறது. சிங்க்-ஆக்சைடு தனி உப பொருளாக வருவதால், இதிலுள்ள நஷ்ட லாபத்தை ஈடுகட்ட வாய்ப்பு இருக்குமென்று அங்கே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஜப்பானிலே சிங்கே வேண்டாமென்று புதிய முறையைத் தருகிறோம் என்று சொல்கிறார்கள். சிங்க் பெரும்பாலும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படவேண்டியிருப்பதால் ஜப்பான் முறை சரிவருமா, அமெரிக்க முறை சரிவருமா என்று பரிசீலிக்கவேண்டி யிருக்கிறது.

Tamil Chamber of Commerce

* 44 *Q*.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Tamil Chamber of Commerce has submitted any memorandum the Government about 26th October 1971, about non-availability of Alcohol to Industries;

(*b*) if so, the details thereof; and

(*c*) the action taken thereon?

தமிழ்நாடு வணிகக் கழகம்

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தொழிற்சாலைகளுக்கு ஆல்கஹால் கிடைக்காததைக் குறித்து, 1971 அக்டோபர் 26-ஆம் நாள் அளவில் தமிழ் நாடு வணிகக் கழகம் அரசுக்கு விண்ணப்பம் ஏதும் பணிந்தனுப்பியுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

(உ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

28th January 1972]

(இ) சாராயம் காய்ச்சும் தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் சாராயத்தில் ஒரு குறிப்பிட்ட விகிதத்தை தொழிற்சாலை, பரிசோதனைக் கூடங்களின் உபயோகத்துக்கென்று ஒதுக்க வேண்டும் என்று தமிழக வர்த்தகக் கழகம் கோரியிருக்கிறது.

(உ) அது அரசின் பரிசீலனையிலுள்ளது.

THIRU G. SWAMINATHAN : Sir, are the Government aware that for want of alcohal, Pharmaceutical industries are starving nowadays?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பொதுவாக மதுவிலக்குக் கொள்கையில் ஏற்பட்ட மாறுதல் காரணமாக சாராயத்திற்கு அதிக வாய்ப்பு இருக்கிறது தமிழ் நாட்டிலே, அதற்குத் தேவையான மொலாசஸ் நாம் கொடுக்க வேண்டும். திடீரென்று ஏற்பட்ட சூழ்நிலையிலே ஓரளவுக்குத் தொழிற்சாலைகளுக்குப் போதுமான அளவு நாம் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டாலும், அதற்கான புதிய முயற்சி எடுத்து அண்மையில் உத்தரப் பிரதேசத்திலிருந்து 11 லட்சம் லிட்டர் இதற்காக வாங்கிக்கொடுக்க முன்வந்தோம். இப்போது 2 மிலியன் காலன் உற்பத்தி செய்யுமளவிற்கு கோவை மாவட்டத்தில் ஒரு தொழிற்சாலைக்கு அனுமதி தரப்பட்டிருக்கிறது. அது இன்னும் ஓராண்டில் உற்பத்தி தொடங்கும். அதற்குப் பிறகு பெருமளவில் தர முடியும். கூட்டுறவுத் துறையில் இரண்டு மிலியன் காலன் உற்பத்தி செய்ய முயற்சிக்கிறோம். இப்போது இன்னும் மூன்று கூட்டுறவுத் துறையில் வர இருக்கின்றன. மொலாசஸ் அதிகமாகக் கிடைக்கும்போது இந்தப் பிரச்னை தீர்க்கப்பட்டு விடும்.

THIRU G. SWAMINATHAN : Sir, will the Government consider reducing alcohol for drinking and giving it to industries on a priority basis?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பொதுவாக நம்முடைய அனுபவத்தில் தமிழ் நாட்டில் கூட அந்தப் பழக்கம் அதிகமாக இருப்பதாகத் தெரியவில்லை. முதலிலுள்ள கிராக்கி வரவரக் குறைந்துவருகிறது. சர்க்கார் தலையிடாமலே அந்தப் பிரச்னை தீர்க்கப்பட்டுவிடுமென்று நம்புகிறோம்.

Expenditure on residences, furniture etc.

* 45 *Q.*—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Minister for Public Works be pleased to state the amount spent on the articles of furniture, furnishing materials, renovation, repairs and upkeep of the residences of the Hon. Ministers of the Government during the year 1970–71 ?

மாண்புமிகு அமைச்சர்களின் இருப்பிடங்கள்,
மரச் சாமான்களுக்கான செலவு

திரு. வி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :